நாள்.18.02.2026

**அசல் வழக்கு எண். 26/2019**
**பெயர். செவ்வந்தி**

**க.பெ.கருப்பையன்**

**வா.சா.2– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றம் மூலம் எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் ஆமாம். 1ம் வாதி என் மாமியார். 2ம் வாதி என் கணவர். என் கணவர் ஊரில் இருக்கிறார். சாட்சி சொல்லும் நிலையில் உள்ளாரா என்றால் ஆமாம். வழக்கு விவரம் பற்றி யார் மூலமாவது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். யார் படித்து காண்பித்தது என்றால் என் மருமகள் ஜெயந்தி. வழக்கு விவரம் பற்றி கேள்வி கேட்டால் பதில்சொல்ல தெரியும் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் புல எண், விஸ்திரணம் தெரியுமா என்றால் ச.எண் தெரியாது, 200 குழி. என்ன பரிகாரம் வாதி கேட்டுள்ளார் என்றால் வழக்கு சொத்து எங்களுக்கு மீண்டும் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார்கள். யார் வழக்கு சொத்தை எடுத்துக்கொண்டது என்றால் 1ம் பிரதிவாதி முத்துவேல் அய்யா. எவ்வளவு சொத்தை எடுத்துக்கொண்டார் என்றால் 100 குழி.

மீதமுள்ள 100 குழி யார் பெயரில் உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தீர்ப்பானது யாரும் பிரித்துகொள்ளவில்லை என் மாமனாரும் இறந்துவிட்டார் அப்படியேதான் உள்ளது. 1ம் பிரதிவாதி எழுதி வாங்கிகொண்டபோது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். எங்கு வைத்து எழுதி வாங்கிக்கொண்டார் என்றால் திருவோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதிக்கொண்டார். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போனேனா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி மட்டும் தான் கிரையம் பதிவு செய்தாரா வேறு ஏதாவது பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும்தான் பதிவு செய்யப்பட்டது. என் மகன்கள் மணிகண்டன், சிவக்குமார், மகேந்திரன் என்றால் ஆமாம். கெங்கையம்மாள் என் மாமியார். கெங்கையம்மாள் மற்றும் என் கணவரும் சேர்ந்து அன்றைய தேதியிலேயே என் மகன்களுக்கு தான பத்திரம் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் ஆமாம். சக்திவேல், சத்தியராஜ் பழனிவேல் மகன்கள் என்றால் ஆமாம். பழனிவேல் என் கணவரின் அண்ணன் என்றால் ஆமாம். என் மாமியார் கெங்கையம்மாள் மற்றும் பழனிவேல் சேர்ந்து சக்திவேல், சத்தியராஜ் என்பவர்களுக்கு தான பத்திரம் எழுதிவைத்தார்கள் என்றால் ஆமாம்.

மேற்படி விவரத்தை நான் எங்கும் சொல்லவில்லை என்றால் இல்லை நான் சொல்லியுள்ளேன். இரண்டு செட்டில்மெண்ட் எழுதிவைத்ததில் எங்களுக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. அந்த தான செட்டில்மெண்ட்படி என் மகன்களுக்கும், பழனிவேல் மகன்களுக்கும் பட்டா மாற்றிக்கொள்ளவில்லை என்றால் ஆமாம். பத்திரம் கூட வாங்கவில்லை. அந்த 2 பத்திரமும் என் மாமியார், என் கணவர், பழனிவேல் அவர்களாக எழுதிவைத்தார்களா என்றால் 1ம் பிரதிவாதிதான் அனைவரையும் கைரேகை வைக்கசொன்னார். பத்திரம் பதிவு செய்தபோது வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் எங்கள் குடும்பம் எல்லோரும் போயிருந்தோம். யார் யார் சாட்சி கையெழுத்துபோட்டார்கள் என்றால் 1ம் பிரதிவாதி அழைத்து வந்த சாட்சிகள்தான்.

2செண்டில்மெண்ட் பத்திரத்திலும் நான்கெல்லையில்"***நாளது தேதியில் முத்துவேல், ஊராட்சிமன்ற தலைவர் கிரையம் பெற்ற மனைக்கு மேற்கு***" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன வாசகம் எழுதியிருந்தது என்பது பற்றி தெரியாது என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் வக்கீல் மூலம் தெரியும். 2செண்டில்மெண்ட் பத்திரத்திலும் அய்யாகண்ணு அவர்களுக்கு நீதிமன்றம் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு போட்ட பிறகுதான் தெரியும். என் கணவர் கைரேகைதானா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ல் உள்ளது என் கணவர் மற்றும் கொழுந்தன் புகைப்படங்கள் என்றால் ஆமாம். அதில் அமுதா மற்றும் மாமியார் புகைபடங்கள் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ல் "4 முதல் 5 மணியளவில் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சாஆ.1 ல் உள்ள குடும்ப அட்டைகள், ஆதார் கார்டுகள் சரிதானா என்றால் ஆமாம். பத்திரம் பதிவு செய்த காலத்தில் எங்களை ஏமாற்றி கையெழுத்து வாங்கிவிட்டார்கள் என்று பதிவாளரிடம் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. எங்களுக்கு எழுதிக்கொடுக்கிறார் என்று நம்பிதான் கையெழுத்து போட்டோம்.

போலியாக கையெழுத்து போட்டு பத்திரம் பதிவு செய்தார்கள் என்பது எங்கள் கட்சி இல்லை என்றால் ஆமாம். ஆனால் சொத்தை அதிகமாக மாற்றி எழுதிக்கொண்டார். எங்களுக்கு எழுதிவைப்பதாக சொல்லி 1ம் பிரதிவாதி அவர் பெயரில் எழுதிக்கொண்ட பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆமாம். மேல்கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். காவல்நிலையத்தில் 1ம் பிரதிவாதி எங்களை

ஏமாற்றிவிட்டார் என்று தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் நான் கொடுத்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வக்கீலிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் வக்கீல் எழுதிகொடுத்தாரா என்றால் ஆமாம். அதிலுள்ள விவரத்தை நான் சொன்னேனா என்றால் ஆமாம். நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்த விவரத்தை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். 2 செண்டில்மெண்ட் பத்திரம் பற்றிய விவரங்களை நான் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வாக்குமூலத்திலுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

என் பிள்ளைகள் மீது உள்ள தான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு சொன்ன விவரத்தையும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என் மகன்களுக்கு எழுதிவைத்த தான பத்திரம் செல்லாதது ரத்து செய்ய வேண்டும் என்று நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். வழக்கு உள்ளது. என் மாமனார் இறந்தது நவம்பர் 2015 என்றால் ஆமாம். 23.07.2014 ல் தாவா புல எண்ணிலுள்ள சொத்தை முத்துவேலுக்கு கிரையம் செய்து கொடுத்தது தெரியுமா என்றால் தெரியும். ஆனால் என் மாமனார் அப்படி செய்துகொடுக்கவில்லை. அந்த கிரைய ஒப்பந்தத்தை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 200 குழியில் 100 குழியை கெங்கையம்மாள், என் கணவர் எழுதிக்கொடுத்து மீதி 100 குழிக்கான ரூ.6,31,000/- தொகையை திருப்பி கொடுப்பதாக ஒரு முச்சலிக்கா எழுதிக்கொடுத்துவிட்டு அதனடிப்படையில்தான் 1ம் பிரதிவாதிக்கு 100 குழியை எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

200 குழியையும் முத்துவேலுவிற்கு கிரையம் எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ரூ.12,60,000/- நிர்ணயம் செய்து அய்யாகண்ணு ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் இல்லை. ரூ.12,60,000/- யையும் என் மாமனார் வாங்கிக்கொண்டார் பின்னிட்டு கிரையம் செய்யும்போது 100 குழி வேண்டும் என்று கூறியதால் 100 குழியை எங்களுக்கு கொடுத்துவிட்டு அதற்குண்டான பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டார் அதுப்படி முச்சலிக்கா அய்யாகண்ணுவின் வாரிசுகள் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் இல்லை. என் மாமனார் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி 100 குழிக்கான முழு கிரைய தொகையை செலுத்திதான் கிரையம் செய்துள்ளார் அதை ஒப்புக்கொண்டுதான் என் மாமியார், என் கணவர் அவர் சகோதரர் அனைவரும் கிரைய பத்திரத்தில் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் இல்லை. பழனிவேல், அமுதா

ஊரில் உள்ளார்களா என்றால் ஆமாம். முழு பணத்தை பெற்றுக்கொண்டு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது பிரதிவாதிகள் மோசடி செய்கிறார்கள் என்று பொய் கட்சி செய்கிறேன் என்றால் இல்லை. என் கணவர், பழனிவேல் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொன்னால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.